# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ஆம் தேதி நாள்:31.10.2023 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரண கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் செப்டம்பர்-2023 மாதத்திற்கு பிறப்பு -38 மற்றும் இறப்பு -13 பதிவுகள் ஆக மொத்தம் பதிவுகள் 51 இந்நகராட்சியில் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2361/2023/எச்1 | தீர்மான எண்-1011<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-2 | ஈசானியத்தெரு நுண்ணுயிர் உரக்கிடங்கில் அமைந்துள்ள (FSTP) கசடு கழிவுநீர் சுத்தகரிப்பு மையத்தில் தனியார் வாகனம் மூலம் கொண்டுவரப்படும் கசடு கழிவுநீரை மறுசுழற்சி செய்யப்படுகிறது. மேலும் தனியார் வாகனம் கொண்டுவரப்படும் கசடு கழவுநீரை சுத்தகரிப்பு மையத்தில் கொண்டு செல்வதை முறைப்படுத்திட வேண்டி உள்ளது. அலுவலகத்தில் விடுமுறை தினங்களில் தொகை செலுத்துவதில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கலை தவிற்கும் பொருட்டு, வாகன உரிமைதாரர்களுக்கு **ரூ.100/-** டோக்கன் (ஒரு நடைக்கு) அச்சிட்டு வழங்கி அதன் மூலம் நகராட்சி கருவூலத்தில் தொகை செலுத்தும் முறையை அமுல்படுத்தலாம். அவசரம் அவசியம் கருதி 5000 செலுத்து சீட்டுகள் அச்சடித்து பெறலாம். மேலும் அதற்கான உத்தேச செலவீனம் **ரூ.5000/-**ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அச்சடித்து பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்: 075/2023/எச்1 | தீர்மான எண்-1012<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-3 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தினசரி பிறப்பு / இறப்பு பதிவுகள் சம்மந்தப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பிறப்பு / இறப்பு பதிவிற்கான படிவங்கள் தற்போது தீர்ந்துவிட்ட நிலையில் அவசர அவசியம் கருதி படிவம்-1 பிறப்பு பதிவுகள், படிவம்-2 இறப்புபதிவுகள், படிவம்-4 இறப்பு பதிவிற்கான மருத்துவச்சான்று மற்றும் படிவம்-4A இறப்பு பதிவிற்கான மருத்துவச்சான்று ஆகிய படிவங்கள் தமிழ்நாடு மல்டிபர்போஸ் மூலம் வாங்கி வழங்கிடவும், அதற்காகும் உத்தேச செலவினம் **ரூ.50,000/-** நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அச்சடித்து பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2361/2023/எச்1 | தீர்மான எண்- 1013<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதாரம், நகரில் சுற்றித்திரியும் கால்நடைகளால் பொதுமக்களுக்கும், பொதுசுகாதாரத்திற்கும் கேடுவிளைவிப்பதாக உள்ளதால் கால்நடைகளைப் பிடித்து மயிலாடுதுறை கோசாலையில் விடப்பட்டு வருகிறது. இக்கால்நடைகளை பிடித்து வாகனம் மூலம் கொண்டு செல்லவும் கயறுகள், வைக்கோல், ரேம்ப் ஆகியவை வாங்கி வழங்க ஆகும் செலவீனம் தொகை ரூ.50,000/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2342/2023/எச்1 | தீர்மான எண்- 1014<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-5 | இந்நகராட்சிக்கு 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், பதிவேடுகள், படிவங்கள், படிவங்கள் மற்றும் கணினிவரி வரிசூல் இரசீகள் வாங்கி கொள்வதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.**5.00லட்சம்** ஆகும். இச்செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** 1. அனுமதிக்கலாம்<br>2. மேற்படி அவ்வபோது தேவைப்படும் எழுதுப்பொருட்களை, அரசு அங்கீகாரம் பெற்றுள்ள தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., IND No:13/திருச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்ட பிரிண்டிங் சர்வீஸ் & Allied Industries Industrial Cooperative Society Ltd IND.No.2/நாகை மேற்படி கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து வாங்கி கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம். முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்: 1525/2020/டி2 | தீர்மான எண்- 1015<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-6 | இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய திரு.எம்.பிரபாகரன் (பணிநீக்கம்) என்பவரால், நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்:WP.25550/2016 நகராட்சி சார்பில் எதிர்உறை மற்றும் கூடுதல் எதிர்உறை தயார் செய்ததற்கான கட்டணம் ரூ.18,000/-ஐ சென்னை அரசு வழக்கறிஞர் திரு.P.சீனிவாசன் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு**:1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வழக்கின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டண தொகையை வழங்கியுள்ளதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 606/2023/சி1 | தீர்மான எண்- 1016<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-7 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய மற்றும் பழைய பேருந்து நிலைய 13 எண்ணிக்கையிலான கடைகள் மற்றும் பிடாரி வடக்கு வீதியிலுள்ள நகராட்சி கட்டிட முதல் தளகட்டிடம் ஆகியவற்றிக்கான ஒப்பந்தப்புள்ளிகள்/ ஏலம் 13.10.2023 அன்று கோரிட செய்தி மக்கள் தொடர்புத்துறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வாயிலாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரங்கள் செய்யப்பட்ட கீழ் கண்டுள்ள நாளிதழ்கள் பட்டியல் தொகை வழங்கிடகோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. தினத்தந்தி நாளிதழ் ரூ. 24885.00<br>2. KALPUBLICATIONS ரூ. 20160.00<br>மொத்தம் **ரூ. 45042.00 .**<br>இத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்: 8881/.2016./அ1 | தீர்மான எண்- 1017<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

**பொருள் எண்-8**

சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா, T.T பிள்ளை பூங்கா, முருகன் பூங்கா, நகர்மன்ற தலைவர் இல்லம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டதற்காக பெறப்பட்ட பட்டியல் விவரம் கீழ் கண்டவாறு.

| வ. எண் | மாதம் / ஆண்டு | தினசரி நாளிதழ் பெயர் | ஏஜென்ட் பெயர் | தொகை ரூ. | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஜீன்–2020 முதல் மார்ச்–2023 வரை | தினத்தந்தி | G.நடராஜன் | 20,431/– | 43,317/– |
| 2 | ஜீன்–2020 முதல் மார்ச்–2023 வரை | தினமலர் | G.நடராஜன் | 22,886/– | |
| 3 | ஜீன்–2020 முதல் மார்ச்–2023 வரை | தினகரன் | S.கார்த்தி | 21,295/– | 21,295/– |
| 4 | ஜீன்–2020 முதல் மார்ச்–2023 வரை | தினமணி | N.சேட்டு | 22,243/– | 35,208/– |
| 5 | ஜீன்–2020 முதல் மார்ச்–2023 வரை | மாலை மலர் | N.சேட்டு | 12,965/– | |
| 6 | மே – 2020 முதல் மே –2023 வரை | மாலை முரசு | K.R.சரவணன் | 13,140/– | 13,140/– |
| | | கூடுதல் | | 1,12,960/– | 1,12,960/– |

மேற்படி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை **ரூ.1,12,960/–** ஐ நகராட்சி பொது நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
3. மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 6272/2006/இ1

தீர்மான எண்- 1018
நாள்.31.10.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்-9**

சீர்காழி நகராட்சியில் **பொது நிதி 2023-2024** இன் கீழ் **ரூ.5.00** இலட்சம் மதிப்பீட்டில் சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்யும் பணிக்கு 13.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | பிரகியா எண்டர்பிரைசஸ், 124, நேருஜி ரோடு, விழுப்புரம். 605602 | (-) 0.03 % குறைவு |
| 2 | T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி.609110 | (+) 0.10% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1 ல் உள்ள பிரகியா எண்டர்பிரைசஸ், 124, நேருஜி ரோடு, விழுப்புரம் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்: 1818/2023/இ1/1

தீர்மான எண்- 1019
நாள்.31.10.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்-10**

சீர்காழி நகராட்சியில் பொது நிதி 2023-2024 இன் கீழ் **ரூ.5.00 இலட்சம்** மதிப்பீட்டில் வார்டு எண் 6 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்யும் பணிக்கு 13.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி.609110 | (-) 0.13 % குறைவு |
| 2 | M.கார்த்திகேயன், பிள்ளையார் கோவில் தெரு, செம்மங்குடி, சீர்காழி. | (+) 0.20 % அதிகம் |

தீர்மான எண்- 1020
நாள்.31.10.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1 ல் உள்ள T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண்: 1818/2023/இ1/2.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-11</td>
<td>சீர்காழி நகராட்சியில் பொது நிதி 2023-2024 இன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 13 தேர் வடக்கு வீதி வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 13.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>M.கார்த்திகேயன், பிள்ளையார் கோவில் தெரு, செம்மங்குடி, சீர்காழி.</td><td>(+) 0.12 % அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி.609110</td><td>(-) 0.05 % குறைவு</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–2 ல் உள்ள T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண்: 1818/2023/இ1/3</td>
<td>தீர்மான எண்- 1021<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-12</td>
<td>சீர்காழி நகராட்சியில் குடிநீர் திட்ட நிதி - 2023-2024 இன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 06 ஈசானியத் தெருவில் அமைந்துள்ள கருமாதி மண்டபத்தில் சிறுமின் விசை பம்பு அமைக்கும் பணிக்கு 13.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>திவிஷா மாரி கன்ஸ்ட்ரக்ஷன்,<br>103, எட தெரு,<br>கோரநாடு, மயிலாடுதுறை.</td><td>(-) 0.03 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>K.செல்வம்,<br>ஊழியக்காரன் தோப்பு தெரு,<br>சீர்காழி.</td><td>(+) 0.10 % அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1 ல் உள்ள திவிஷா மாரி கன்ஸ்ட்ரக்ஷன், 103, எட தெரு, கோரநாடு, மயிலாடுதுறை நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண்: 1818/2023/இ1/4</td>
<td>தீர்மான எண்- 1022<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-13</td>
<td>சீர்காழி நகராட்சியில் குடிநீர் திட்ட நிதி - 2023-2024 இன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சீர்காழி நகராட்சி 24 வார்டுகளுக்கும் குடிநீர் பம்புகளுக்கு உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு 13.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி. 609110</td><td>(-) 0.03 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M.கார்த்திகேயன், பிள்ளையார் கோவில் தெரு, செம்மங்குடி, சீர்காழி.</td><td>(+) 0.12 % அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1 ல் உள்ள T.ஜீவா, 6C/19A, திருமஞ்சன வீதி, சீர்காழி நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண்: 1818/2023/இ1/5</td>
<td>தீர்மான எண்- 1023<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள்<br>எண்-14</td>
<td>இந்நகராட்சியில் ஒப்பந்தாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வங்கி மூலம் செலுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரர்களின் GST எண்ணில் பிரதி மாதம் e-filling செய்ததற்கான கட்டணம் 2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.12,000 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.12,000 வழங்கிட கோரி திரு.ஸ்ரீதர் , பட்டயகணக்கர் , மயிலாடுதுறை அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்கிடவும் 2023–2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.15000 செலவினம் மேற்கொள்வதற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2268/2023/ பி2</td>
<td>தீர்மான எண்- 1024<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள்<br>எண்-15</td>
<td>இந்நகராட்சியில் ஒப்பந்தாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வங்கி மூலம் செலுத்தப்பட்ட வருமான வரி தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரர்களின் PAN எண்ணில் பிரதி மாதம் e-filling செய்ததற்கான கட்டணம் 2022–2023 ஆம் ஆண்டி மூன்றாவது காலாடண்டிற்கான தொகை ரூ.34950 மற்றும் நான்காவது காலாண்டிற்கான தொகை ரூ.35400 வழங்கிட கோரி திரு.முத்துகுமாரன் , பட்டயகணக்கர் , கடலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்கிடவும் 2023–2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.150000 செலவினம் மேற்கொள்வதற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2268/2023/ பி2</td>
<td>தீர்மான எண்- 1025<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள்<br>எண்-16</td>
<td>சீர்காழி நகராட்சியின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் தணிக்கையினை மண்டல இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடித ந.க.எண்.67/அ1/2023 நாள் 26.04.2023 மூலம் தணிக்கை அறிக்கை 17.7.2023 அன்று பெறப்பட்டுள்ளது அதற்கான பதில்கள் மன்றத்தின் பதிவிற்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1919/2018/பி2</td>
<td>தீர்மான எண்- 1026<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள்<br>எண்-17</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அலுவலக புலன செய்தி ( Whats app ) மற்றும் மின்னஞ்சல் கடிதம் நாள்.14.10.2023-ல் தெரிவித்துள்ளதற்கு ஏற்ப, நீண்ட காலமாக நிலுவையாக உள்ள குத்தகை இனங்களை கணினியில் கேட்பினை நீக்கம் செய்திடவும், நகர்மன்ற மன்ற அனுமதி பெற்று கேட்பினங்களை முறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சி வரியில்லா இனங்களான குத்தகை இனங்கள் கணினியில் 2023–2024– ஆம் ஆண்டு ( Non-Tax) பட்டியலில் கீழ்கண்ட கேட்பு இனங்கள் நீண்ட காலமாக நிலுவையாக உள்ளது, இவ்வினங்கள் தொடர்ந்து வருடாவருடம் வருவதால், இதில் கண்டுள்ள வரியினங்கள் செலுத்தப்பட்டு கேட்பினம் மட்டும் உள்ளதால் இவ்விரிவிதிப்புகளை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>கடை எண்</th><th>குத்தகைதாரர் பெயர் & விபரம்</th></tr>
<tr><td>1</td><td>69 – 099/93</td><td>கோவிந்தராஜ், O,T, Inside shop</td></tr>
<tr><td>2</td><td>73 – 099/113</td><td>ஜானகிராமன், பழைய பேருந்து நிலைய கடை</td></tr>
<tr><td>3</td><td>74 – 099/114</td><td>முகம்மது பாரூக், பழைய பேருந்து நிலைய கடை</td></tr>
<tr><td>4</td><td>145 – 099/13</td><td>ராதாம்பாள், முருகன் பூங்கா கட்டண கழிவறை</td></tr>
<tr><td>5</td><td>162 – 099/201604</td><td>சாகுல் ஹமீது, மட்டன் மார்கெட்</td></tr>
<tr><td>6</td><td>163 – 099/201605</td><td>சந்திரசேகரன், ஆடுவதை செய்யும் கூடம்</td></tr>
<tr><td>7</td><td>20 – 099/110</td><td>ராஜாங்கம்</td></tr>
<tr><td>8</td><td>099/201601</td><td>ஏ. ராணி</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2366/2023/அ1</td>
<td>தீர்மான எண்- 1027<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-18 | இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மைப்பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் வெளிப்புற பணியாளர்களுக்கு 2023–24 ஆம் ஆண்டில் பண்டிகை காலங்களில் வழங்கப்படும் சீருடை மற்றும் தையல்கூலி ஆகியவற்றுக்கு ஆகும் உத்தேச செலவினம் **ரூ.2,00,000/**யை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும், இப்பணியினை அங்கீகாரம் பெற்ற அரசு கூட்டுறவு நிர்வனங்களிடமிருந்து பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு :__ மன்றம் அனுமதிக்கலாம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2585/2017/எச்1 | தீர்மான எண்- 1028<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-19 | இந்நகராட்சி 2023–24 ஆம் ஆண்டில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தூய்மைப் பணியாளர்கள், தூய்மைப்பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் வெளிப்புற பணியாளர்களுக்கும் பாதுகாப்பு உபகரணங்களான ரெயின் கோட், காலணிகள் வாங்குவதற்குரிய உத்தேச செலவினம் **ரூ.2,00,000/**யை பொது நிதிலியிருந்து செலவு செய்வதற்கும், இப்பணியினை அங்கீகாரம் பெற்ற அரசு கூட்டுறவு நிர்வனங்களிடமிருந்து பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2585/2017/எச்1 | தீர்மான எண்- 1029<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-20 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–21 பனமங்கலம் வடக்கு தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சிறு மின் விசைப்பம்பினை பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணி செய்து பயன் பாட்டிற்கு கொண்டுவரஅப்பகுதி மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க, நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி, தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண்: 2406/2023/இ1. | தீர்மான எண்- 1030<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-21 | சீர்காழி நகராட்சி வார்டு எண்:09 தாடாளன் கோவில் காமராஜபுரத்தில் அமைந்துள்ள குளத்தினை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022 ன் கீழ் **ரூ.56.32 இலட்சம்** மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பெறும் வண்ணம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த குளத்திற்கு பெயர் எதுவும் இல்லாமல் ஊரின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. மேலும், இந்த வருடம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருவதால் அப்பகுதி ஊர் பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மேற்படி குளத்திற்கு டாக்டர் கலைஞர் நூற்றாண்டு குளம் என பெயர் சூட்டிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு :__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் :1082/2022/இ1 | தீர்மான எண்- 1031<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-22 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 12.800 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. அதன்படி மழைநீர் கால்வாய்களிலிருந்து வெளியேறும் மழைநீர் அருகில் உள்ள வருவாய் துறைக்கு சொந்தமான பிரதான கால்வாய்களில் (Channels) வழியே நீர் நிலைகளில் சென்றடையும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில் பயன்பாட்டில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்காலில் அனேக இடங்களில் பொது மக்கள் மூலம் தங்கள் குடியிருப்புகளில் உள்ள சமையலறை மற்றும் குளியலறைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரினை போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மழைநீர் கால்வாயுடன் இணைப்புகள் ஏற்படுத்தியுள்ளதால் மழை காலங்களில் கால்வாய்களில் மழைநீருடன் கழிவு நீரும் கலந்து நீர் நிலைகளில் கலப்பதால் நீர் நிலைகள் மாசடையும் நிலை உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வு கூட்டத்தில் அவ்வாறு பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் இல்லாத நகராட்சிகளில் மழைநீர் கால்வாய்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை சுத்திகரித்து வெளியேற்றிட தேவையான கட்டமைப்புகளை உருவாக்கவும் இத்திட்டத்தினை தூய்மை பாரத இயக்கம் 2.0 மூலம் நிதி ஆதாரம் பெற்று திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை கலந்தாலோசகர் மூலம் தயாரித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி விரிவான திட்ட அறிக்கை | தீர்மான எண்- 1032<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

தயார் செய்திட கலந்தாலோசகர் தேர்வு செய்ய உரிய விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட மூன்று நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | அளித்த விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | SKN ENGINEERS,<br>Door No.S2, Plot No.11, Sakthi Nagar Extn,<br>Ezhil Avenue, Madipakkam, Chennai-91 | மதிப்பீட்டு விலையில் 1.45 % + GST |
| 2 | Tiruchy Engineering Consultancy House,<br>1/1 A, Nariyan Street, Srirangam,<br>Trichirappalli-620006 | மதிப்பீட்டு விலையில் 1.90 % + GST |
| 3 | ER.P.S.Murugavel.,B.E.,M.I.E.,<br>Door No.23, Brindavanam 5th Street, Chetpet,<br>Cheenai-31 | மதிப்பீட்டு விலையில் 2.00 % + GST |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த SKN ENGINEERS, Door No.S2, Plot No.11, Sakthi Nagar Extn, Ezhil Avenue, Madipakkam, Chennai-91 நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவு தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண் : 2196/2023/இ1

---

**பொருள் எண்-23**

சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–20 அகர திருக்கோலக்கா தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள கைப்பம்பு அமைந்துள்ள இடத்தில் புதியதாக கைப்பம்பு தரைத்தளம் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை (RWH) அமைத்து தர அப்பகுதி மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க, நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி, பணி மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.75,000/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்: 2411/2023/இ1

தீர்மான எண்- 1033
நாள்.31.10.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

**பொருள் எண்-24**

சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:08 தாடாளன் மேற்கு வீதியில் தேசிய நகர்புற சுகாதார பணி (NUHM) 2021–22 திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) கட்டும் பணி ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிக்கான மூல மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கழிவு நீர் சேகரிப்பு தொட்டி, பேவர் பிளாக் தளம் மற்றும் கட்டிடத்தின் வெளிபுறத்தில் உள்ள மழை நீர் வடிகால் மீது மூடு பலகைகளை அமைக்க போதிய வழிவகை இல்லாததால் கட்டிட பயன்பாட்டின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. பணியின் அவசியத்தினை கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண் : 09/2022/இ1

தீர்மான எண்- 1034
நாள்.31.10.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| பொருள் எண்-25 | இந்நகராட்சியில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் **6** KVA Online UPS பழுதடைந்துவிட்டதால் மின்தடையின்போது கணினிகள் இயக்கிட இயலவில்லை. எனவே புதிதாக Online UPS ஒன்று வாங்கி கொள்ள ஆகும் செலவினம் **ரூ.2.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2030/2023/இ1 | தீர்மான எண்- 1035<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-26 | சீர்காழி நகராட்சி வார்டு எண்:21 துறையூரில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான தொடக்கப் பள்ளியில் 1979-ஆம் ஆண்டு கட்டப்பட்ட எம்.ஜி.ஆர் சத்துணவு மையக்கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 40ஆண்டுகளுக்கு மேலான நிலையில் கட்டிடம் முற்றிலும் பழுதடைந்து சேதமடைந்துள்ளது. எனவே பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி பள்ளி வளாகத்தில் உள்ள காலியிடத்தில் தகர ஷீட் கொண்டு தற்காலிகமாக சத்துணவுமையம் அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.1.30** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>** 1.பள்ளி மாணவர்களின் நலன்கருதி பழுதடைந்த கட்டிடத்தினை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும் தற்காலிகமாக சத்துணவுமையம் அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண் : 2047/2023/இ1 | தீர்மான எண்- 1036<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-27 | சீர்காழி நகராட்சி அலுவலகவளாகத்தில் வாகனங்கள் நிறுத்த போதிய நிழற்குடை வசதிகள் அமைக்கப்படாமல் உள்ளது. எனவே நகராட்சிக்கு சொந்தமான வாகனங்களை வெயில் மற்றும் மழைக்காலங்களில் வெளியிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றது. தற்போது நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு புதியதாக 2 ஈப்பு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளதால் வாகனங்களை பாதுகாப்பாக வைத்திட தகர ஷீட் கொண்டு ஷெட் அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.6.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண்: 2047/2023/இ1/1 | தீர்மான எண்- 1037<br>நாள்.31.10.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

நாள்: 27-10-2023 நகர்மன்ற தலைவர்
இடம்: சீர்காழி சீர்காழி நகராட்சி